[1968 மார்ச் 16

2. அவையுரிமைக் கேள்வி

"சிலம்பொலி" வார இதழில் பேரவை குறித்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : அடுத்து, திரு. ந.தருமலிங்கம் அவர்கள் ஓர் அவையுரிமைக் கேள்வியைக் கொண்டு வருகிறார்கள்.

திரு. ந. தருமலிங்கம் : பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்ட பேரவையின் 187–வது விதி (1) (2) உட்பிரிவுகளின்படி அடியிற்கண்ட அவையுரிமைக் கேள்வியை நான் எழுப்புகிறேன்.

"மதுரையிலிருந்து வெளியாகும் 11—3—1968 தேதியிடப்பட்ட சிலம்பொலி என்ற வார ஏட்டில் 4-ம் பக்கத்தில் "இது என்ன சட்ட சபையா ? சந்தைக்கடையா ? சட்டசபை மெம்பர்கள் தூங்குகிறார்களா ?" என்று எழுதப்பட்டுள்ளது என்பதால் நான் அவையுரிமைக் கேள்வியைக் எழுப்புகிறேன்."

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, எழுப்பட்டிருக்கின்ற பிரச்னை உரிமைப் பிரச்னையா என்று பார்த்தால் உரிமைப் பிரச்னையின் கீழேதான் வருகிறது. அது உரிமைப் பிரச்னையின்கீழ் வருகிறதா இல்லையா என்பது தலைவர் அவர்களின் முடிவைப் பொறுத்தது. சட்டசபையா சந்தைக்கடையா என்று கேட்டிருப்பதிலிருந்து அதிலிருந்து வருகின்ற பொருள் சந்தைக்கடைதான என்ற தன்மைகுத் தான் பொருள் வருகின்றது. இங்கே நான் மதுரையைப் பற்றி பேசுகின்ற பொழுது கைது செய்யப்பட்டதாகக் கூறியதாக போடப்பட்டிருக்கிறது. நான் இங்கே பேசியபொழுது இதுவரை யாருமே கைது செய்யப்படவில்லை என்பதைத்தான் சொல்லியிருக்கிறேன். நான் குறிப்பிடும்பொழுது "இது சம்பந்தமாக இரண்டு வழக்குகள் வந்திருக்கின்றன என குறிப்பிட்டுள்ளேன். Under sections 341 and 323 a case is registered against Velu and three others. Under sections 147, 341 and 323 a case is registered against Nedumaran and five others.

ஆக, இரண்டு வழக்குகள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன" என்று சொன்னேனே தவிர, யாரும் கைது செய்யப்பட்டதாகச் சொல்லவில்லை. 'உண்மைக்குப் புறம்பானதைக் கூறியிருக்கிறார்கள், ஆகவே, சட்ட மன்றமா சந்தைக் கடையா என்று எழுதப்பட்டிருக்கிறது. அவ்வாறு எழுதியிருப்பதிலே உரிமைப் பிரச்சினை இருக்கிறது. ஆயினும் அந்தப் பத்திரிகை கவனிக்கப்பட வேண்டிய அளவுக்கு உள்ளதல்ல. அகவே, இதை உரிமைக் குழுவுக்கு விட வேண்டிய அவசியமில்லை. எச்சரிக்கை செய்து விட்டால் போதுமானது என்று கருதுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : மதுரையில் 4-ம் தேதி நடைபெற்ற சம்பவங்கள் குறித்து 5-ம் தேதியன்று மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பொன்னப்ப நாடார், இராமமூர்த்தி, சித்தன் ஆகியோர் இந்தச் சட்டப் பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குத் தெளிவான விளக்க உரையைத் தந்திருக்கிறார்கள். இந்த மன்றம் அதுபற்றி உடனடியாக நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறது. 'சட்டசபை மெம்பர்கள் தூங்குகிறார்களா ?' என்று கேட்பது முறையற்றதாகத்தான் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியது போல், கைது செய்யப்பட்டதாகக் கூறுத ஒரு கூற்றை, அவ்வாறு கூறியது போல் அந்தப் பத்திரிகை வெளியிட்டிருக்க கூடாது மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது அது இந்த மன்றத்தின் நிலையைப் பாதிப்பதாக இருக்கிறது. இருப்பினும், இந்தச் சபையின் முன்னவர் அவர்கள் குறிப்பிட்டதுபோல், இந்தப் பத்திரிகை அவ்வளவு விளம்பரம் உள்ள பத்திரிகை அல்ல என்ற காரணத்தால். இப்படிப்பட்ட சிறு செய்திகளுக்கெல்லாம் இந்த மன்றம் பெரிய அளவுக்கு மதிப்பளிக்க வேண்டிய அவசியமில்லை என்ற காரணத்தால், அந்தப் பத்திரிகையை எச்சரிக்கிறோம் என்ற அளவோடு இதை முடித்துக் கொள்கிறேன்.